செய்தி மடல்

ICRC

இலங்கை

# மக்களுக்கு சேவை செய்வதும், பாதுகாத்தலும்

ஜூலை – செப்டம்பர் 2018 செய்திமடல்



அரசாங்கத்தின் ஆயுத மற்றும் இராணுவ படை தொடர்பில் பொலிசார் மிகவும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

பொது ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை பேணுதல், குற்றத்தை தடுத்தல், உதவி ஒத்தாசைகளை வழங்குதல், பொதுமக்களுக்கு சேவை வழங்கி பாதுகாத்தல் போன்ற அடிப்படைப் பொறுப்புக்கள் தொடர்பான சட்ட அமுலாக்கத்தை பேணும் பிரதான பொறுப்பு ஒரு பொலிஸ் அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது. தமது பணியை நிறைவேற்றும் முகமாக சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் கைது, தடுத்து வைப்பு, தேடுதல் மற்றும் கைப்பற்றல், படை மற்றும் ஆயுதங்களை பயன்படுத்தல் போன்ற அடிப்படை அதிகாரங்களை பிரயோகிக்கின்றனர். இவ் அதிகாரங்கள் எவ்வாறு பிரயோகிக்கப்படுவதானது மக்கள் சார்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அரசின் சர்வதேச மனித உரிமை கடப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் தேசிய சட்டத்தின் மூலம் இந்த செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவர்களது பயிற்சியும், உபகரணமும் இதை கருத்திற் கொள்ள வேண்டும். உதாரணமாக, அவர்களது உபகரணம் படிப்படியான ஒரு பதிலளிப்பை மேற்கொண்டு, சம்பந்தப்படாத தரப்புக்கு பாதிப்பு ஏற்படுவதை தடுக்க துணைபுரிய வேண்டும். ஆகையால், பாதுகாப்புப் படைகளால் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட ஆயுதங்கள் சட்ட அமுலாக்கலுக்கு பொருத்தமற்றதாகும். பொலிஸ் அதிகாரிகளுக்கு பாதுகாப்பான உபகரணத்தை வழங்குவதானது படை வலுவை பயன்படுத்துவதற்கான தேவையை குறைக்கும். யுத்தம் மற்றும் வன்முறையினால் பாதிக்கப்படும் மக்களை பாதுகாத்து அவர்களுக்கு உதவும் தமது ஆணைக்கு அமைய, செஞ்சிலுவை சர்வதேச குழுவானது (செ.ச.குழு) படை, ஆயுதங்கள், கைது, தடுத்துவைப்பு, தேடுதல் மற்றும் கைப்பற்றல் என்பவற்றை கட்டுப்படுத்தும் விதிமுறைகள் தொர்பாக பொலிஸாருக்கு எடுத்துரைக்கின்றது. இவற்றுக்கு அமைய, எவரும் கண்மூடித்தனமான கைது அல்லது தடுத்துவைப்புக்கு உள்ளாகக்கூடாது. கைது செய்யும் விடயத்தில் உள்ள பாதுகாப்புக்களின்படி பொலிசார் கட்டாயம் கைது செய்யப்படுபவர்களை கண்ணியத்துடனும், மனிதநேயத்துடனும் நடத்த வேண்டும் என கூறப்படுகின்றது.

அத்தோடு, கைது செய்யப்படுபவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அவர்களை கைது செய்யும்போது அவர்களின் உரிமைகள் பற்றி தெரிவிக்க வேண்டும். கைது செய்யும்போது அவர்கள் அப்பாவியானவர்கள் என கருத வேண்டும். காணாமலாக்கப்படுதல் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகளை தவிர்க்க வேண்டும். குற்றம் செய்ததாக குற்றச்சாட்டப்பட்டால், தம்மை நீதிமன்றத்தின் முன் உடனடியாக ஆஜர்படுத்தும் உரிமையைக் கொண்டுள்ளனர். ஒரு சட்டத்தரணியையும், வைத்தியரையும் பெற்றுக்கொள்ளும் உரிமையை அவர்கள் பெற்றுள்ள அதேவேளை, அந்த சந்திப்பை தடுத்து வைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இடமொன்றில் மேற்கொள்ளும் உரிமையும் காணப்படுகின்றது. வெளி உலகம் மற்றும் தமது குடும்பத்தவர்களுடனான தொடர்பாடலுக்கு வசதியளிக்கப்பட வேண்டும் என்பதோடு, தாமதிக்காமல் தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் சட்டபூர்வ தன்மையை சவாலுக்கு உட்படுத்தும் உரிமை இருக்க வேண்டும். நியாயமான ஒரு காலப் பகுதிக்குள் நேர்மையான விசாரனை நடத்தப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும். தேடுதல் நடவடிக்கைகள் சட்டரீதியாக முன்னெடுக்கப்பட வேண்டும். தேடப்படுபவர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பதோடு, அவர்களது சொத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். மேலும், வன்முறைகளை தடுப்பதற்கும், கண்காணிப்பதற்கும், தேவையென்றால் தண்டிப்பதற்குமான ஒரு முறைமையை பொலிஸார் கொண்டிருக்க வேண்டும் என செ.ச.குழு வலியுறுத்துகின்றது. இலங்கையில், தேடுதல், கைது, தடுத்துவைப்பு, படைவலு மற்றும் ஆயுதங்களை பயன்படுத்தல் என்பன தொடர்பான நடவடிக்கைகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய சர்வதேச தரநியமங்கள் குறித்து பொலிசாருக்கு விழிப்புணர்வூட்டும் அமர்வுகளை செ.ச.குழு நடத்தி வருகின்றது. செப்டம்பர் மாதத்தில், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் அடங்கலாக 700 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பல அமர்வுகளில் பங்கேற்றார்கள். நீதி உத்தரவாதம், கைது, தடுத்துவைப்பு மற்றும் விசாரனையின்போது அவர்களை வழிநடத்தும் விடயத்தில் உள்ள அடிப்படை பாதுகாப்புக்கள் ஆகிய தொனிப்பொருள்களின் கீழ் இடம்பெற்ற இந்த அமர்வுகள் பொலிசாருடன் இணைந்து நடத்தப்பட்டது.

# எமது நாளாந்த செயற்பாட்டின்போதான பாதுகாப்பான அடைவு




கிளை நிறைவேற்று அதிகாரிகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்க நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் உட்பட 28 இற்கும் மேற்பட்டோர் செ.ச.குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த பாதுகாப்பான அடைவு தொடர்பான பயிற்சியில் பங்கேற்றனர்.

காட்சி முன்வைப்பு மற்றும் குழுக் லந்துரையாடல்களைப் பயன்படுத்தி, பாதுகாப்பான அடைவு குறித்த திட்டம் பற்றிய தமது விளக்கத்தை அவர்கள் விருத்தி செய்து கொண்டனர். பாதுகாப்பான அடைவுக்குரிய மூலக்கூறுகளின் நடைமுறை மற்றும் தொழிற்பாட்டு பிரயோகம் குறித்த பரீட்சயத்தை அவர்கள் பெற்றுக்கொண்டதோடு, தற்போதுள்ள உள்ளக பயிற்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் பாதுகாப்பான அடைவு குறித்த அமர்வுகளை ஒன்றிணைப்பது பற்றிய தமது அறிவைப் பலப்படுத்திக் கொண்டதோடு, பயிற்சிக் குறிப்புக்களை எப்படி விருத்தி செய்வது என்பது பற்றியும் கற்றுக்கொண்டனர்.







பாதுகாப்பான அடைவைக் கொண்டிருந்தல் என்பது குறிப்பாக உள்ளக வன்முறை அல்லது பதற்றத்தின் போது தேவையுடையவர்களை அடைந்துகொள்ளக்கூடிய வசதியைக் குறிக்கும். தனிநபர் மற்றும் நிறுவனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்போது மேற்கொள்ளக்கூடிய விடயமாகவும் இது கருதப்படுகின்றது. இந்த அடைமானம் முக்கியமானதாகும். இல்லையென்றால் தேவையுடைய சமூகங்களுக்கு உதவி செய்ய முடியாமல் போகும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளை அலுவலகங்கள் நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ளன. குடும்பத் தொடர்புகள், முதலுதவி, அனர்த்த பதிலளிப்பு, நிகழ்ச்சித்திட்டப் பகுதிகளில் பாதுகாப்பான அடைவை உறுதிப்படுத்தல், மனிதநேய விழுமியங்களை மேம்படுத்தல் போன்ற விடயங்களில் உள்ள ஆற்றலை பலப்படுத்துவதற்காக இந்த தேசிய செஞ்சிலுவைச் சங்கத்துக்கு செ.ச.குழு உதவி வருகின்றது.



# எதிர்கால சட்டவாளர்கள் மத்தியில் சர்வதேச மனிதநேய சட்டத்தை மேம்படுத்தல்




14ஆவது வருடாந்த ஹென்ரி டுனன்ட் வழக்காடு மன்ற போட்டி சட்டத்துறையில் பயின்றுவரும் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்காக கடந்த செப்டம்பர் மாதம் கொழும்பில் நடத்தப்பட்டது. தகுதிகாண் சுற்றுக்களில் ஐந்து குழுக்கள் பங்கேற்றன. அதன்பின்னர், யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத் துறை அணியும், கொழும்பு பல்கலைக்கழக சட்டப்பீட அணியும் இறுதிப் போட்டியில் பங்கேற்றன.

மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் பிரிகேடியர் ஜி.குமனொவா ஆஜர்படுத்தப்படுவது சம்பந்தமான எடுகோலின் அடிப்படையில் இந்த அணியினர் வாதிட்டார்கள்.







மகஜர்களும் வாதக்கருத்து முடிவுகளும் எதிர் வாதங்களும் முன்வைக்கப்பட்டதன் பின்னர், சர்வதேச மனிதநேய சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய மூவரடங்கிய நீதிபதி குழாம் கொழும்புப் பல்கலைகழக்க அணிக்கு சார்பாக தமது முடிவை வழங்கினார்கள். முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் ஈரானின் தெஹ்ரான் நகரில் நடைபெறவுள்ள பிராந்திய வழக்காடு மன்றப் போட்டியில் மோதவுள்ளன.

வெற்றிபெற்ற கொழும்பு பல்கலைக்கழக அணி : பிரஷாந்தி விக்னானந்தா, விஷ்மி அபேவர்தன, ஷெலானி பலிஹவடன ஆகியோர் செ.ச.குழுவின் பாதுகாப்பு இணைப்பாளர் புரூனோ ரேமன்டிடம் இருந்து வெற்றிக் கேடயத்தை பெறுகின்றனர். செ.ச.குழுவின் சட்ட ஆலோசகர் சமிந்திக்கா எல்காடுவவும் இங்கு காணப்படுகின்றார். செ.ச.குழுவும் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடமும் ஒவ்வொரு வருடமும் ஹென்ரி டுனன்ட் வழக்காடு மன்ற போட்டியை நடத்துகின்றன. சட்டத்துறையில் கல்வி பயிலும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் சர்வதேச மனிதநேய சட்டம் தொடர்பான கற்றலை ஊக்குவிப்பது இதன் நோக்கமாகும்.



# தகவல்களும், எண்ணிக்கைகளும்

## ஜூலை – செப்டம்பர் 2018

### காணாமல் போனவர்களின் குடும்பங்களது தேவைகளை நிறைவேற்றுதல்

தேடல் பற்றிய விசாரணைகளின் முன்னேற்றம் பற்றி அறிவதற்காக 1,380 குடும்பகள் சந்திக்கப்பட்டன. காணாமல்போனவர்கள் தொடர்பில் புதிதாக 62 விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்டன. காணாமல்போன சுமார் 700 குடும்பங்களின் உறவினர்களுக்காக (துணைநிற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக) வாராந்த் உளவியல்-சமூகத் துணை அமர்வுகள் நடத்தப்பட்டன. தமது வாழ்வாதாரத்தை விருத்தி செய்து கொள்வதற்காக 263 குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

### கைதிகளின் நலன்

நாடுபூராகவும் 222 கைதிகள் பார்வையிடப்பட்டனர். இது தொடர்பான ஆய்வுமுடிவுகள் மற்றும் பரிந்துரைகள் சிறைச்சாலை அதிகாரிகளுடன் நம்பகமாக பகிர்ந்து கொள்ளப்பட்டது. தடுப்புக் காவலில் உள்ள தமது உறவினர்களை பார்க்கச் செல்வதற்காக 88 குடும்பங்களுக்கு பயணக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. 3433 கைதிகளுக்கு கல்வி மற்றும் பொழுதுபோக்குக் கருவிகள் வழங்கப்பட்டன. மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை சிறைச்சாலைகளுக்கு நிர்வகிப்புக் கருவிகள் அன்பளிக்கப்பட்டதோடு, வவுனியா மற்றும் திருகோணமலை சிறைச்சாலைகளுக்கு சமையலறைகளை அபிவிருத்தி செய்வதற்காக கட்டடப் பொருட்கள் வழங்கப்பட்டன.

### சர்வதேச மனிதநேய சட்டத்தை ஊக்குவித்தல்

சமாதானத் துணை செயற்பாடுகளிலும், செ.ச.குழுவின் வகிபாகம் மற்றும் ஆணையிலும் சர்வதேச மனிதநேய சட்டத்தை பிரயோகிப்பது பற்றி மாலியில் சமாதான பணிக்கு அமர்த்தப்படும் 345 இராணுவ வீரகளுக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டன. கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் 25 இராணுவ அதிகாரிகளுக்கு சர்வதேச மனிதநேய சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தொடர்பில் இரண்டு நாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. வருடாந்த கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கில் உள்ளக இடம்பெயர்வின் உலக சவால்கள் பற்றி செ.ச.குழுவின் சர்வதேச சட்டம் மற்றும் கொள்கைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் ஈவா ஸ்வபோத உரையாற்றினார். இதில் உலகம் முழுவதிலும் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். படை மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்தல், தடுப்புக்காவல் என்பன பற்றிய ஒரு நாள் பயிற்சி களுத்துறையிலுள்ள இலங்கை பொலிஸ் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் 619 சிங்கள பெண் காண்ஸ்டபிள் உத்தியோகத்தர்களும், 20 தமிழ் பெண் கான்ஸ்டபிள் உத்தியோகத்தர்களும் பங்கேற்றனர். பொலிஸ் பொறுப்பதிகாரிகள், குற்றப் பிரிவு பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் 125 பேருக்கு படை மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்தல், தடுப்புக்காவல் என்பன பற்றிய ஒரு நாள் பயிற்சி சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் நடத்தப்பட்டது.

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு உதவி செய்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மாவட்டக் கிளைகளைச் சேர்ந்த 55 பணியாளர்கள் மற்றும் தொண்டர்கள் அனர்த்தப் பதிலளிப்பு நுடபங்கள் தொடர்பில் பயிற்சியை பெற்றனர். பல மாவட்ட மட்ட நிகழ்வுகளில் ஏழு முதலுதவி முகாம்கள் நடத்தப்பட்டன. 215 தொண்டர்கள் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட அடிப்படை முதலுதவி பரீட்சையில் பங்கேற்று தமது முதலுதவித் திறன்களை விருத்தி செய்து கொண்டனர். அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2,000 நீர் கொள்கலன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மனிதநேயக் கொள்கைகள் மற்றும் செஞ்சிலுவை, செம்பிறை இயக்கம் தொடர்பான மூன்று பிரச்சார அமர்வுகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க மாட்டக் கிளைகளால் மாணவர்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்களுக்காக நடத்தப்பட்டன. அவசர நிலைமைகளின்போது உள்நாட்டு செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக 28 பணியாளர்களும், தொண்டர்களும் கற்றுக்கொண்டனர்.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு
29, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05
இலங்கை
தொலைபேசி: + 94 (11) 250 33 46 தொலைநகல்: + 94 (11) 250 33 48
மின்னஞ்சல் : colombo@icrc.org www.icrc.org

வவுனியா அலுவலகம்,
70, வைரவர் கோவில் வீதி,
வைரவர்புளியங்குளம், வவுனியா
தொலைபேசி : +94 (0)24 222 28 55 தொலைநகல்: +94 (0)24 222 25 37

மட்டக்களப்பு அலுவலகம்
மன்ரெஸா வீதி, கொத்துக்குளம், பிள்ளையாரடி
மட்டக்களப்பு
தொலைபேசி : +94 (0) 65 222 70 70

facebook.com/icrc
twitter.com/icrc
instagram.com/icrc

ICRC

2018.0624/002 10.2018 200